செய்தி வெளியீடு எண். 04-2017 நாள்: 02.05.2017

# விழுப்புரம் மாவட்டம் மீன்வளத்துறை சார்பாக தூண்டில் மற்றும் செவுள்வலை மூலம் சூரை மீன்பிடிப்பிற்கு ஏதுவாக மீனவர்கள் புதிய மீன்பிடி விசைப்படகுகளை கட்டுதலுக்கான 50% மானிய உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

******

அண்மைக்கடல் பகுதியில் அதிகரித்து வரும் மீன்பிடி அழுத்தத்தை குறைத்திடவும், ஆழ்கடல் பகுதியில் செறிந்துள்ள மீன்வள ஆதாரங்களை முறையாக பயன்படுத்திடவும், தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடி விசைப்படகினை கட்டும் மீனவர்களுக்கான ஒரு புதிய திட்டத்தினை அறிவித்து தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடி விசைப்படகினை கட்டிட படகொன்றிற்காகும் செலவினத்தில் 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.30.00 இலட்சம் வரை மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்படும்.

தமிழகத்தை சார்ந்த முழு நேர மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் அதிகபட்சம் 6 பேர் கொண்ட குழுவாகவோ அல்லது மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அல்லது தனி நபராகவோ இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை மீன்வளத்துறையின் இணையதளமான www.fisheries.tn.gov.in லிருந்து கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது விண்ணப்பப் படிவங்களை மண்டல மீன்துறை துணை இயக்குநர்/ இணை இயக்குநர் மற்றும் கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள் அலுவலகங்களில் அலுவலக நாட்களில் நேரில் விலையின்றி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரர் மீன்துறை இணையதளத்தில் உள்ள விரிவான வழிகாட்டு நெறிமுறைகளின்படி பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மீன்துறை ஆணையர், நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், டி.எம்.எஸ்.வளாகம், தேனாம்பேட்டை, சென்னை 600 006 என்ற முகவரிக்கு பதிவு/விரைவு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 16.06.2017 பிற்பகல் 5.00 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சூரைமீன்பிடி படகின் வரைபடம் தகுதிவாய்ந்த கப்பல்/ மீன்பிடிகலன் கட்டுமான வரைவாளரிடமிருந்து (Naval Architect) பெற்று அசலாக இணைக்கப்பட வேண்டும். பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு மாநில அளவிலான பதிவு எண்ணுடன் கூடிய ஒப்புகை சீட்டு விண்ணப்பதாரருக்கு அனுப்பப்படும்.

மேலும் இத்திட்டம் தொடர்பான கூடுதல் விபரங்கள் மற்றும் தெளிவுரைகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் அல்லது மண்டல மீன்துறை துணை/இணை இயக்குநர் அலுவலகங்களை நேரிலோ அல்லது சம்பந்தப்பட்ட அலுவலக தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.